# பரீட்சைச் சான்றிதழ்கள் விநியோகிக்கும் ஒரு நாள் மற்றும் சாதாரண சேவைகளை நடைமுறைப்படுத்துதல்

ஒரு நாள் சேவையானது ஒவ்வொரு அலுவலக நாளிலும் நடைமுறைபடுத்தப்படுவதோடு, பரீட்சைச் சான்றிதழ்களை விநியோகிக்கும் ஒரு நாள் மற்றும் சாதாரண சேவைகளுக்கான கொடுப்பனவு நடவடிக்கைகள் மு.ப. 9.00 மணி முதல் பி.ப.3.00 வரை நடைபெறும். 2001 மற்றும் அதற்கு பின்னரான வருடங்களுக்குரிய பரீட்சைச் சான்றிதழ்களை www.doenets.lk அல்லது https://certificate.donets.lk இணையத்தளத்தின் ஊடாக நிகழ்நிலை முறையில் விண்ணப்பிக்க முடியும். அதற்கு முன்னைய வருடங்களுக்குரிய பரீட்சைச் சான்றிதழ்களை பரீட்சைத் திணைக்களத்திற்குச் சமூகமளித்து, ஒரு நாள் சேவை அல்லது சாதாரண சேவை மூலமாக விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். இருப்பினும் 2022.11.22 ஆம் திகதிக்குப் பின்னர் மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பிக்க வேண்டாம் என்பதை அறியத்தருவதோடு, அவ்வாறான விண்ணப்பங்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகிறேன்.

மேலும் பரீட்சைச் சான்றிதழ்கள், சான்றிதழ் உரிமையாளருக்கு மாத்திரமே வழங்கப்படுவதோடு, ஏற்றுக்கொள்ளக்கூடிய விசேட காரணங்கள் இருப்பின் மாத்திரம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான ஆவணங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பதாரியின் தாய், தந்தை, வாழ்க்கைத்துணை அல்லது பிள்ளைகள் ஆகியோருக்கு சான்றிதழ்களை வழங்குவது தொடர்பில் கவனத்திற்கொள்ளப்படும். சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்கும் போதும் பெற்றுக்கொள்ளும் போதும் சான்றிதழ் உரிமையாளரின் ஆளடையாளப் பத்திரமொன்றை (தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/ செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்) சமர்ப்பிப்பதன் மூலம் சான்றிதழின் உரித்தை உறுதிப்படுத்துவது கட்டாயமாகும். அத்தோடு தேவைப்படுமிடத்து பிறப்புச் சான்றிதழ் / திருமண பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

சான்றிதழில் உள்ள பெயர், சமர்ப்பிக்கப்படுகின்ற ஆளடையாளப்பத்திரத்தில் உள்ள பெயர் ஆகியவற்றுக்கிடையில் வேறுபாடு காணப்படின் பெயரில் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக பாடசாலை பரீட்சைகள் மற்றும் பெறுபேறுகள் கிளையை நாடுதல் வேண்டும். சுட்டெண்களை தேடிவழங்கும் சேவையின் கீழ் விண்ணப்பித்து 10 அலுவலக நாட்களுக்குப் பின்னர் சுட்டெண் தேடித்தரப்படும்.

அவுஸ்திரேலிய வீசா பெற்றுக்கொள்வதற்கான சான்றிதழ்களை விநியோகிக்கும்போது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் கட்டாயமாகும். அதற்காக விண்ணப்பிக்கும் போது கடவுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை வழங்குதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படாத சுட்டெண்கள் மற்றும் சான்றிதழ்கள் தொடர்பாக எவ்வித பொறுப்பும் கூறப்படமாட்டாது என்பதோடு, அவ்வாறான சான்றிதழ்கள், சுட்டெண்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீண்டும் பணம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

எல்.எம்.டீ. தர்மசேன
பரீட்சை ஆணையாளர் நாயகம்